**செய்தி வெளியீடு எண்: 669** **நாள்:01.10.2019**

**<u>பொது(தேர்தல்கள்–1)த் துறை</u>**

## <u>செய்தி வெளியீடு</u>

இந்திய தேர்தல் ஆணையம், **01.01.2020** தேதியிட்டு சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம், **2020** தொடர்பாக "வாக்காளர் சரிபார்க்கும் திட்டம் (EVP)" அறிவித்து **01.09.2019** முதல் செயல்படுத்தி வருகிறது. இதன் நோக்கம் அனைத்து தகுதியான வாக்காளர்களும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்து உறுதி செய்வதுடன் அதன் தரத்தை மேம்படுத்தலாம். இத்திட்டம் **15.10.2019** வரை நடைபெறும். இத்திட்டத்தில் குடிமக்கள் வாக்காளருடைய சம்பந்தப்பட்ட விபரங்களை கீழ்க்காணும் வழிகளில் சரிபார்த்து உறுதிபடுத்திக்கொள்ளலாம்:-

அ) வாக்காளர் உதவி எண் **1950** (மூத்த குடிமக்கள் மற்றும் ஊனமுற்ற நபர்களுக்கு மட்டும்)

ஆ) செல்லிடபேசி செயலி (வாக்காளர் உதவி எண்)

இ) தேசிய வாக்காளர் சேவை தளம் (nvsp.in)

(ஈ) பொது சேவை மையங்களை அனுகுவதன் மூலம் (CSC)

(உ) வாக்காளர் பதிவு அலுவலகத்தில் இயங்கும் வாக்காளர் வசதி மையத்தின் மூலம் (VFC)

மற்றும் அவர்களின் விபரங்களை கீழ்க்காணும் ஆவணங்களின் நகல் ஒன்றினை சமர்ப்பித்து உறுதிப்படுத்திக்கொள்ளலாம்:–

1. இந்திய கடவுச்சீட்டு
2. ஓட்டுநர் உரிமம்
3. ஆதார் அட்டை
4. நியாய விலை அட்டை
5. அரசு/அரசு சார் பொதுத்துறை நிறுவனங்களின் அடையாள அட்டை
6. வங்கி கணக்கு புத்தகம்
7. நிரந்தர கணக்கு எண் அட்டை
8. உழவர் அடையாள அட்டை
9. தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமை பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை
10. சமீபத்திய குடிநீர்/தொலைபேசி/மின்சாரம்/சமையல் எரிவாயு இணைப்பு ரசீது.

இதுவரையில் 23,37,426 வாக்காளர்கள் தங்களது விவரங்களை இத்திட்டத்தின் கீழ் சரிபார்த்தும் மற்றும் உறுதிபடுத்தியும் உள்ளனர். அதில் 9,00,403 வாக்காளர்கள் உதவி செல்லிட பேசி செயலி மூலமும், 19,341 வாக்காளர்கள் தேசிய வாக்காளர் சேவை தளம் மூலமும் மற்றும் 12,85,839 வாக்காளர்கள் வாக்காளர் வசதி மையம் மூலமாகவும் பதிவு செய்துள்ளனர்.

வாக்காளர்கள் மேற்கண்ட ஏதேனுமொரு வழிகளின் மூலம் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி தங்களது வாக்காளர் பட்டியல் விவரங்களை சரிபார்த்து உறுதிபடுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி**
**தமிழ்நாடு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**